# தேச பக்தி

DHESA BAKTHI

நடுநிலை காலை நாளிதழ்

RNI.No.TNTAM/2022/86012

ஆசிரியர் : G. ராஜா 9842364068 இணைஆசிரியர் : R. கண்ணன் 9994422779

★மலர்:05 ★இதழ்: 128 ★ 08.09.2026 ★தமிழ் நாளிதழ் ★செவ்வாய்கிழமை ★பக்கம்-4 ★விலை.ரூ. 5/- சென்னை

★Volume:05 ★Issue:128 ★08.09.2026 ★TamilDaily ★Tuesday ★Page-4 ★Price-₹5/- Chennai



**தேச பக்தி நாளிதழில் அனுபவம் உள்ள செய்தியாளர்கள், போட்டோகிராபர்கள், தாலுகா செய்தியாளர்கள் தேவை**

தமிழகம் மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் மாவட்ட மற்றும் தாலுகா வாரியாக அனுபவம் உள்ள பத்திரிக்கை துறையில் சாதிக்க விரும்பும் ஆண் ,பெண் நிருபர்கள் தேவை

G.ராஜா ஆசிரியர்: 9842364068

செய்தி மற்றும் விளம்பர தொடர்புக்கு

R.கண்ணன் இணைஆசிரியர்: 9994422779


# "மேகமலை - வருசநாடு ஆக்கிரமிப்பு அகற்றம்" சட்டப்பூர்வ யதார்த்தமும், அமைப்புகளின் திசைதிருப்பும் அரசியலும்

தேனி மாவட்டம் மேகமலை – வருசநாடு வனப் பகுதியில் உச்சநீதிமன்றத்தின் (CIVIL APPEAL NO(S). 63956397 OF 2025) உத்தரவுப்படி ஆக்கிரமிப்புகளை அகற்றும் பணிகள் தீவிரமடைந்து வருகின்றன. இந்நடவடிக்கை குறித்து பல்வேறு அரசியல் கட்சிகளாலும், சமூக அமைப்புகளாலும் தொடர் போராட்டங்களும் அறிக்கைகளும் வெளியிடப்பட்டு வரும் நிலையில், இதன் பின்னணியில் உள்ள சட்டப்பூர்வ உண்மைகளையும் நிர்வாக செயல்பாடுகளையும் பொதுமக்கள் தெளிவாக புரிந்துகொள்வது அவசியமாகிறது. முதலாவதாக, வன உரிமைகள் சட்டம் 2006 (FRA) யாருக்குப் பாதுகாப்பு அளிக்கிறது என்பதில் தெளிவு வேண்டும். இச்சட்டத்தின் கீழ், நொச்சி ஓடை, அரசரடி போன்ற பகுதிகளில் வாழும் 'பளியர்' போன்ற பூர்வகுடி பழங்குடியின மக்கள், 2005 டிசம்பர் 13க்கு முன்பிருந்தே வசித்து வந்ததற்கான சான்றுகள் இருந்தால் மட்டுமே முழு சட்டப் பாதுகாப்பு பெற முடியும். அதேவேளையில், பழங்குடியினர் அல்லாத பிற சமுதாயத்தினர் இச்சட்டத்தின்கீழ்உரிமை கோர வேண்டுமென்றால், அவர்கள் குறைந்தபட்சம் 3 தலைமுறைகளாக, அதாவது 75 ஆண்டுகளாக தொடர்ச்சியாக அங்கு வசித்து வருகிறோம் என்பதற்கான தகுந்த ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும். இதை தவிர்த்து, "நாங்கள் 20 அல்லது 30 ஆண்டுகளாக பயிரிடுகிறோம்" என்று கூறுபவர்களுக்கோ அல்லது 2005க்குப் பிறகு காடுகளை ஆக்கிரமித்தவர்களுக்கோ சட்டப்படி எவ்வித பாதுகாப்பும் கிடையாது.

மத்திய உயர்நிலை குழு (CEC) மற்றும் வனத்துறை ஆய்வின்படி, இங்கு ஆக்கிரமிப்பில் உள்ள 5, 072.643 ஹெக்டேர் நிலம் மூன்று வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளது. இதில் நிரந்தர வீடுகள் மற்றும் வாழ்வாதாரம் கொண்ட முதல் பிரிவில் 1,395 நபர்களும், தற்காலிக வீடுகள் கொண்ட இரண்டாம் பிரிவில் 233 நபர்களும் சேர்க்கப்பட்டுள்ளனர். இதில் ஏற்கனவே54குடும்பங்களுக்கு மாற்று வீடுகள் வழங்கப்பட்டுவிட்டன. முக்கியமாக, மூன்றாம் பிரிவின்கீழ் உள்ள 2,867.706 ஹெக்டேர் நிலம் முழுக்க முழுக்க வணிக ரீதியிலான விவசாய நிலங்களாகும். இந்த பிரிவில் உள்ள 2,773 ஆக்கிரமிப்பாளர்கள் பெரும்பாலானோர் வசதி படைத்த பெரு முதலாளிகள் மற்றும் திட்டமிட்டு நிலத்தை கைப்பற்றியவர்கள் என்பதால், இவர்கள் மீதுதான் மாவட்ட நிர்வாகம் முதற்கட்டமாக தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது.

"அரசாங்கம் ஏழைகளை மட்டுமே துரத்துகிறது"என்றபோலி பிரச்சாரத்தை உடைக்கும் விதமாக, ஆக்கிரமிப்பாளர்கள் பட்டியலில் இடம் பெற்றுள்ள 118 அரசு மற்றும் ஓய்வுபெற்ற அதிகாரிகள் மீதும் துறைரீதியான 17(B) ஒழுங்கு நடவடிக்கைகளை தேனி மாவட்ட ஆட்சியர் முடுக்கிவிட்டுள்ளார். மேலும், சட்டவிரோதமாக செயல்பட்ட 12 சொகுசு விடுதிகளுக்கும் (RESORTS) சீல் வைக்கப்பட்டுள்ளது. அதேநேரத்தில், பளியர் பழங்குடியின மக்களில் சிலரது பெயர்கள் தவறாக ஆக்கிரமிப்பாளர் பட்டியலில் சேர்ந்தது குறித்து எழுந்த புகார்களுக்கு விளக்கமளித்துள்ள தேனி மாவட்ட ஆட்சியர், 75 ஆண்டுக்கால பூர்வகுடி சான்று வைத்திருப்பவர்கள்மற்றும்செல்லுபடியாகும் பட்டா வைத்துள்ள உண்மையான நில உரிமையாளர்கள் எவரும் வெளியேற்றப்பட மாட்டார்கள் என்றும், தவறாக பெயர்கள் சேர்க்கப்பட்டிருந்தால் மாவட்ட நிர்வாகத்திடம் மனு அளித்து திருத்தி கொள்ளலாம் என்றும் அதிகாரப்பூர்வமாக உறுதியளித்துள்ளார்.

வன எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட போதோ அல்லது திட்ட அறிக்கைகள் தயாரான போதோ அமைதி காத்த சில அமைப்புகளும் அரசியல் கட்சிகளும், தற்போது உச்சநீதிமன்ற தீர்ப்பு வந்த பிறகு, மக்களின் உணர்ச்சிகளை தூண்டிவிட்டு போலி நம்பிக்கையை கொடுத்து வருகின்றன. சம்பந்தமில்லாத மாவட்டங்களில் ஆர்ப்பாட்டம் நடத்துவது,மாஞ்சோலை என்ற தனியார் குத்தகை நிலத்தையும் மேகமலை என்ற புலிகள் காப்பக அரசு நிலத்தையும் ஒன்று சேர்த்து பேசுவது, மற்றும் "வழக்கறிஞர்கள் குழு ஆய்வு" என்ற பெயரில் அறிக்கை விடுவது போன்ற செயல்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்த ஒரு சட்டப்பூர்வ தீர்வையும் தராது. உச்சநீதி மன்ற உத்தரவுக்கு முன் எந்த அரசியல் அழுத்தமும் நிற்காது என்பதே நிதர்சனம். எனவே, உணர்ச்சிப்பூர்வமான பேச்சுக்களை நம்பி ஏமாறுவதை விட்டுவிட்டு, 2005க்கு முந்தைய பழங்குடி சான்றுகள் அல்லது 75 ஆண்டுக்கால தொடர் வாழ்வாதார ஆவணங்கள் வைத்திருப்பவர்கள் மட்டுமே சட்டப்பூர்வ உரிமைகளை பெற முடியும். பொதுமக்கள் மற்றும் அமைப்புகள் சட்டத்தை மதித்து, சட்ட வழிகாட்டுதல்களின்படி மாவட்ட நிர்வாகத்தை அணுகுவதே நிரந்தர தீர்வுக்கு வழிவகுக்கும்.

## திருவண்ணாமலையில்

# மாற்றுத்திறனாளிகளின் உதவித்தொகையை ரூ.15 ஆயிரம் வரை உயர்த்தக்கோரி முற்றுகைப்போராட்டம்

திருவண்ணாமலை, செப்.8

மாற்றுத்திறனாளிகளுக்கான மாதாந்திர உதவித்தொகையை உயர்த்தி வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, தமிழ்நாடு அனைத்து வகை மாற்றுத்திறனாளிகள் மற்றும் பாதுகாப்போர் உரிமைகளுக்கானசங்கம்சார்பில்திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர்அலுவலகம் முன்பு திங்கள்கிழமை முற்றுகைப் போராட்டம் நடைபெற்றது. மாற்றுத்திறனாளிகளின் அன்றாட வாழ்க்கைச் செலவுகள் தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில், அவர்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகையை தமிழக அரசு போதிய அளவில் உயர்த்தாமல் இருப்பதாக போராட்டத்தில் பங்கேற்றவர்கள் குற்றம்சாட்டினர். மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு, அவர்களுக்கான மாதாந்திர உதவித்தொகையை கணிசமாக உயர்த்தி வழங்க வேண்டும் என வலியுறுத்தினர்.




மேலும், ஆந்திர மாநிலத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படும் உதவித்தொகையைப் போன்று, தமிழகத்திலும் தகுதியின் அடிப்படையில் மாதம் ரூ.6,000, ரூ.10,000 மற்றும் ரூ.15,000 என உதவித்தொகையை உயர்த்தி வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டு நடைபெற்ற இந்தப் போராட்டத்துக்கு சங்கத்தின் மாவட்டத் தலைவர் சி.ரமேஷ்பாபு தலைமை தாங்கினார். மாவட்டச் செயலாளர் ஆர்.சிவாஜி, மாவட்டப் பொருளாளர் பி.சத்யா உள்ளிட்ட நிர்வாகிகள் மற்றும் ஏராளமான மாற்றுத்திறனாளிகள் கலந்து கொண்டு கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கங்களை எழுப்பினர்.மாற்றுத்திறனாளிகளின் பொருளாதார நிலை மற்றும் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு, உதவித்தொகையை உடனடியாக உயர்த்துவதுடன், அவர்களின் அடிப்படை தேவைகள் மற்றும் சமூகப் பாதுகாப்பை உறுதி செய்ய தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என போராட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.





நாகராஜாகோவில் ஆவணிதிருவிழா, கன்னியாகுமரி, நாகராஜா கோவிலில் ஆவணி ஞாயிற்றுக்கிழமைமுன்னிட்டு பக்தர்கள் கூட்டம் அதிகமாக இருந்தது. நாகராஜாசிலைக்கு பால் ஊற்ற மக்கள் நீண்ட வரிசையில் நின்று நேர்த்தி கடனை செலுத்தினார்கள் . ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்களுக்கு மதிய அன்னதானம் வழங்கப்பட்டது .

## "STAR மென்பொருள் குளறுபடி"

# தேனி மாவட்டத்தில் 40 நாட்களாக முடங்கிய பத்திரப்பதிவு

## மாவட்ட ஆட்சியர் உடனடியாக தலையிட பொதுமக்கள் கோரிக்கை

தேனி மாவட்டம் சின்னமனூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கருங்கட்டான்குளம் உள்ளிட்ட பகுதிகளில் கடந்த 40 நாட்களுக்கும் மேலாக பத்திரப் பதிவு பணிகள் முற்றிலுமாக முடங்கிப்போய் உள்ளன. இதனால் பொதுமக்கள் கடும் அவதிக்கும் மன உளைச்சலுக்கும் ஆளாகியுள்ளதுடன், அரசுக்குக் கிடைக்க வேண்டிய கணிசமான வருவாயும் முடங்கியுள்ளது.

தமிழ்நாடு அரசு பதிவுத்துறையின் TNREGINET இணையதளம் மற்றும் STAR மென்பொருள் பராமரிப்பு, தொழில்நுட்ப கட்டுப்பாட்டு பணிகள் அனைத்தும் டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் (TCS) நிறுவனத்தின் மூலமே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நிலையில், நகர்ப்புற நில அளவை (Town Survey TS Number) தொடர்பான தரவு புதுப்பித்தலில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்ப கோளாறே இந்த சிக்கலுக்கு முதன்மை காரணமாக கூறப்படுகிறது. சின்னமனூர் மற்றும் கருங்கட்டான்குளம் பகுதிகளை பொறுத்தவரை, பழைய நில அளவை எண்களுக்கு (Survey Number) மட்டுமே மென்பொருளில்வழிகாட்டிமதிப்பு (Guideline Value) காண்பிக்கப்படுகிறது. இவற்றை புதிய நகர நில அளவை எண்களுக்கு (TS Number) ஏற்றவாறு 'கன்வெர்ட்' செய்து, வழிகாட்டி மதிப்பை மென்பொருளில் இணைக்கும் தொழில்நுட்ப பணியை TCS நிறுவனம் இன்னும் முழுமையாக்கவில்லை. இதன் காரணமாக, ஆன்லைனில் ஆவணங்களை பதிவேற்றம் செய்யும் போது 'TS Number' ஏற்றுக்கொள்ளப்படாமல் பதிவு செயல்முறை பாதியிலேயே நின்றுவிடுகிறது.

இது குறித்து பதிவுத்துறை அதிகாரிகளால் TCS நிறுவனத்திற்கு பலமுறை புகார்கள் அனுப்பப்பட்டும், கடந்த 40 நாட்களாக எந்தவித தீர்வும் காணப்படாமல் இப்பிரச்சனை கிடப்பில் போடப்பட்டுள்ளது. சின்னமனூர் மட்டுமன்றி கம்பம், போடி உள்ளிட்ட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் TS எண்கள் கொண்ட




நிலங்களின் பதிவு பணிகள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

பொதுமக்கள் தங்களின் அவசர மருத்துவ செலவுகள், பிள்ளைகளின் உயர் கல்வி, திருமணம் மற்றும் வணிக தேவைகளுக்காக தங்கள் நிலங்களை விற்கவோ அல்லது அடமானம் வைக்கவோ முடியாமல் பரிதவித்து வருகின்றனர். மேலும், பத்திரப் பதிவு நடைபெறாததால் ஆவண எழுத்தாளர்கள், உதவியாளர்கள் மற்றும் அதனை சார்ந்த தொழிலாளர்களின் வாழ்வாதாரமும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

எனவே, இந்த விவகாரத்தில் தேனி மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட பதிவாளர் அவர்கள் உடனடியாக தலையிட்டு, மென்பொருளை நிர்வகிக்கும் TCS நிறுவனத்தின் மூலம் நிலுவையில் உள்ள TS எண்களுக்கான வழிகாட்டி மதிப்புகளை மென்பொருளில் விரைவாக புதுப்பித்து, பத்திரப் பதிவுப் பணிகளை தடையின்றி தொடங்க விரைவு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## ராணிப்பேட்டை மாவட்டத்தில்

# 150 வருட காலமாக வாழ்ந்து வரும் நிலங்களுக்கு பட்டா கோரி நவலாக் புளியங்கன்று மற்றும் நவலாக் அவரக்கரை கிராம மக்கள் மாவட்ட ஆட்சியரிடம் மனு

ராணிப்பேட்டை,
செப்.

ராணிப்பேட்டை மாவட்டத்தில் 150 வருட காலமாக வாழ்ந்து வரும் நிலங்களுக்கு பட்டா கோரி நவலாக் புளியங்கன்று மற்றும் நவலாக் அவரக்கரை கிராம மக்கள் மாவட்ட கண்ணு மற்றும் அவரக்கரை பகுதியில் 500க்கும் மேற்பட்ட குடும்பங்கள் சுமார் 150 வருட காலமாக வாழ்ந்து வருகின்றனர். தற்பொழுது அந்தப் பகுதியில் உள்ள 2000 ஏக்கர் களை தனிநபர் கோவிந்தாஸ் வம்சாவளியினர் கடந்த 50 ஆண்டு காலங்கயில் மோசடிகளை செய்து வருகின்றனர் எனவே நாங்கள் தலைமுறையாக வாழ்ந்து வரும் நிலங்கள் மற்றும் வீடுகளுக்கு பட்டா வழங்கக்கோரி ராணிப்பேட்டைமாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 300க்கும் மேற்பட்ட கிராம மக்கள் கையில்



ஆட்சியரிடம் மனு அளித்தனர்.

ராணிப்பேட்டை அடுத்த நவலாக் புளியங்ளாக எங்கள் கிராம மக்களின் வீடுகளுக்கும் நிலங்களுக்கும் பட்டாகிடைக்க விடாமல் பல்வேறு வகை பேனர் ஏந்தி முற்றுகையிட்டு மாவட்ட ஆட்சியர் இடத்தில் மனு அளித்தனர்.

## திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில்

# மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் கோரிக்கை மனு அளித்த 3 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.1.14 லட்சம் நலத்திட்ட உதவிகள்

திருவண்ணாமலை, செப்.8

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் கோரிக்கை மனுக்கள் அளித்த மாற்றுத்திறனாளிகள் 3 பேருக்கு ரூ.1 லட்சத்து 14 ஆயிரத்து 195 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட கலெக்டர் வந்தனா கார்க் வழங்கினார்.

மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் பொதுமக்களிடம் இருந்து பெறப்பட்ட மனுக்களின் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ளும் வகையில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

அதன்படி, மாற்றுத்திறனாளி ஒருவ உதவித்தொகை, வங்கிக் கடன், முதியோர் உதவித்தொகை, வீட்டுமனைப் பட்டா, சாதிச்சான்று, வேலைவாய்ப்பு, விதவை உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகளுக்கான உதவிகள், சாலை வசதி, பிரதமரின் குடியிருப்புத் திட்டம், விவசாயப் பயிர்க்கடன், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, தாட்கோ கடன் மற்றும் கூட்டுறவு பயிர்க்கடன் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக மொத்தம் 897 மனுக்கள் பெறப்பட்டன.

இந்த மனுக்களை சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அனுப்பி வைத்து, விரைந்து நடவடிக்கை எடுத்து தீர்வு காண வேண்டும் என அனைத்து துறை அலுவலர்களுக்கும் மாவட்ட கலெக்டர் வந்தனா கார்க் அறிவுறுத்தி



ருக்கு ரூ.11,445 மதிப்பிலான மூன்று சக்கர சைக்கிளும், மற்றொருவருக்கு ரூ.15,750 மதிப்பிலான சக்கர நாற்காலியும் வழங்கப்பட்டது. மேலும், ஒரு கை அல்லது கால் பாதிக்கப்பட்ட தம்பதியரில் ஒருவருக்கு திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ் 8 கிராம் தங்க நாணயம் வழங்கப்பட்டது.

இதன் மூலம் 3 மாற்றுத்திறனாளிகளுக்கு மொத்தம் ரூ.1,14,195 மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. மேலும், வீட்டுமனை கோரி மனு அளித்த 6 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டா உத்தரவுகளும் வழங்கப்பட்டன.

மக்கள் குறைதீர்வு கூட்டத்தில் கல்வி னார்.

இதேபோல், செய்யாறு சார் ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்வு கூட்டத்தில் 119 மனுக்களும், ஆரணி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் 71 மனுக்களும் பெறப்பட்டு, சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களின் நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்பட்டன.

நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் அ.சிவசுப்பிரமணியன், திருவண்ணாமலை வருவாய் கோட்டாட்சியர் செல்வம், சமூக பாதுகாப்புத் திட்ட சிறப்பு துணை ஆட்சியர் இளவரசன் உள்ளிட்ட பல்வேறு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தீர்த்தக்கிரியம்பட்டு ஸ்ரீ சிவசக்தி செல்வ விநாயகர் ஆலயத்தில் பாலாபிஷேகம் நிகழ்ச்சி

செங்குன்றம், செப்டம்பர் 08:

மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் தீர்த்தக்கிரியம்பட்டு ஊராட்சி சேரன் தெருவில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ சிவசக்தி செல்வ விநா தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்ச்சியில் உலக மக்கள் நன்மைகள் வேண்டி செங்குன்றம் பராசக்தி வீரம்மாகாளி அம்மன் ஆலயத்திலிருந்து மேள தாளத்துடன் தாய்மார்கள் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு மஹா தீபாராதனை காண்பிக்கப்பட்டது.

இவ்விழாவிற்கு ஆலய நிர்வாகிகள், சுற்றுவட்டார பக்தர்கள் உள்ளிட்ட கிராமபொதுமக்கள் திரளாக



யகர் ஆலயத்தில் 32ஆம் 0ஆண்டு சதுர்த்தி திருவிழாவை முன்னிட்டு பாலாபிஷேகம் நிகழ்ச்சி ஆலய தர்மகர்த்தா ஆர்.சக்திமோகன் ஏற்பாட்டில் மற்றும் தங்களது சிரசியில் பால்குடம் சுமந்துவந்து பின்னர் அருள்மிகு ஸ்ரீ சிவசக்தி செல்வ விநாயகருக்கு பாலாபிஷேகம் செய்து வண்ணமலர்களால் கலந்துகொண்டு அர்ச்சனைகள் செய்து சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கினர்.





## சோளிங்கர் லட்சுமி நரசிம்மர் கோவிலில் கிருஷ்ண ஜெயந்தி விழா:

# சேஷ வாகனத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலித்த கண்ணன் சுவாமி

ராணிப்பேட்டை,
செப்.8

ராணிப்பேட்டை மாவட்டம், சோளிங்கரில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீலட்சுமிநரசிம்மசுவாமி திருக்கோவிலில்கிருஷ்ண ஜெயந்தி விழா சிறப்பாக நடைபெற்றது.

இதனை யொட்டி, கண்ணன் சுவாமிக்கு பல்வேறு வாசனைத் திரவியங்கள் கொண்டு சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது. தொடர்ந்து பட்டு வஸ்திரங்கள், தங்க ஆபரணங்கள், மலர் மாலைகள் மற்றும் பல வண்ண மலர்களால் சுவாமிக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டது. பின்னர் மங்கள வாத்தியங்கள் முழங்க மகாதீப ஆராதனை நடைபெற்றது.

தொடர்ந்து அலங்கரிக்கப்பட்ட சேஷ வாகனத்தில் கண்ணன் சுவாமி எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலித்தார். நான்கு மாட வீதிகளில் நடைபெற்ற வீதி உலாவில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

வீதி உலா சென்ற சுவாமிக்கு வீடுதோறும் பக்தர்கள் கற்பூர தீப ஆராதனை செய்து வழிபட்டனர். சோளிங்கர் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் இருந்து திரளான பக்தர்கள் கலந்து கொண்டு கிருஷ்ணரை வழிபட்டு அருள் பெற்றனர்.

## SBI Junior Associates தேர்வுக்கு இலவச பயிற்சி வகுப்பு:

# பட்டதாரிகள் பயன்பெற திருவண்ணாமலை மாவட்ட நிர்வாகம் அழைப்பு

திருவண்ணாமலை,
செப்.8

SBI வங்கியின் *Junior Associates* பணியிடங்களுக்கான போட்டித் தேர்வில் தேர்ச்சி பெற விரும்பும் பட்டதாரிகளுக்கு திரு தொழில்நெறி வழிகாட்டும் மையத்தின் தன்னார்வ பயிலும் வட்டம் மூலம் *SBI Junior Associates* தேர்வுக்கான இலவச பயிற்சி வகுப்புகள் இன்று முதல்நடைபெறுகின்றன.



வண்ணாமலை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் சார்பில் கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட உள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார்.

SBIயின் *Central Recruitment and Promotion Department* சார்பில் தமிழ்நாட்டில் *Junior Associates* பணியிடங்களுக்கு 1,516 காலிப்பணியிடங்களுக்கான அறிவிப்பு கடந்த ஆகஸ்ட் 11ம் தேதி வெளியிடப்பட்டது.

இத்தேர்வுக்கு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பு முடித்தவர்கள் விண்ணப்பிக்க தகுதி பெற்றுள்ளனர்.

தேர்வு தொடர்பான முழுமையான விவரங்களை SBIயின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் தெரிந்து கொண்டு விண்ணப்பிக்கலாம்.

இந்நிலையில், திருவண்ணாமலை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை வார நாட்களில் காலை 10 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை நடைபெறும் இப்பயிற்சி வகுப்புகளில் சிறந்த பயிற்றுநர்கள் மூலம் ‘டிஜிட்டல்போர்டு’ பயன்படுத்தி தேர்வுக்குத் தேவையான பாடங்கள் மற்றும் பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன.

*SBI Junior Associates* போட்டித் தேர்வை எதிர்கொள்ள ஆர்வமும் விருப்பமும் உள்ள பட்டதாரிகள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் கேட்டுக்கொண்டுள்ளார்.

பயிற்சி வகுப்பில் பங்கேற்க விரும்புவோர் நேரடியாக தொடர்பு கொண்டோ அல்லது 04175233381 என்ற அலுவலக தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு தங்களது பெயரைப் பதிவு செய்துகொண்டோ இலவச பயிற்சியில் கலந்து கொண்டு பயன்பெறலாம்.

# நாகாத்தம்மன் நகர் ஸ்ரீ முனீஸ்வரர் ஸ்ரீ ரேணுகா பரமேஸ்வரி ஆலய ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் விழா

செங்குன்றம், செப்டம்பர் 08:

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் நல்லூர் ஊராட்சி ஆட்டந்தாங்கல் கிராமம் நாகாத்தம்மன் நகர் சர்.சி.வி.ராமன் தெருவில் எழுந்தருளியுள்ள அருள்மிகு ஸ்ரீ முனீஸ்வரர் ஸ்ரீ ரேணுகா பரமேஸ்வரி ஆலய ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் விழா ஆலய நிர்வாகி திருநங்கை பூஜா அம்மா மற்றும் திருநங்கைகள் ஏற்பாட்டில் மற்றும் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்ச்சியில் அனுக்கை, கணபதி பூஜை, கோபூஜை, கணபதி ஹோமம், நவக்கிரகம் ஹோமம், சுவாமி கரிகோலம், பூர்ணாஹூதி, வாஸ்துசாந்தி, பிரவேசபலி, அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம், யாகசாலை பூஜை, நாடிசந்தானம், தத்துவார்ச்சனை, யாத்திரதானம் போன்ற சிறப்புபூஜைகள், ஹோமங்கள் நடைபெற்றது.

பின்னர் யாகசாலையில் சிறப்பு பூஜைகள் செய்யப்பட்ட புனிதநீர் கலசங்களை மேளதாளத்துடன் கொண்டு சென்று ஆலய விமானம், மூலவர் மற்றும் பரிவார தெய்வங்களுக்கு மஹா கும்பாபிஷேகம் செய்து தீபாராதனை காண்பித்து பின்னர் பக்தர்கள் மீது புனிதநீரை தெளித்தனர்.

இதனைத்தொடர்ந்து மூலவர் மற்றும் பரிவார தெய்வங்களுக்கு வண்ண மலர்களால் சிறப்பு அலங்காரம் செய்து தூபதீப ஆராதனை காண்பிக்கப்பட்டது.

இவ்விழாவிற்கு சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்ட மாதவரம் சட்டமன்ற தவெக உறுப்பினர் எம்.எல்.விஜய்பிரபு, ஆன்மீக சிந்தனையாளர்கள் கே.ஆர்.வெங்கடேசன், கே.எம்.டில்லி, ஊராட்சி செயலாளர் லோகநாதன் உள்ளிட்டோருக்கு மாலை அணிவித்து மரியாதை செய்து கலசம் வழங்கி சிறப்பு மரியாதை செய்யப்பட்டது.



இந்நிகழ்ச்சியில் செங்குன்றம் சுற்றுவட்டார பக்தர்கள், ஊர்பொதுமக்கள், சென்னை நாயக்குகள், திருவள்ளூர் மாவட்ட நாயக்குகள் மற்றும் திருநங்கைகள் திரளாக கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

முடிவில் ஆலயம் சார்பில் பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கினர்.



இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற திங்கள் கிழமை மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டு குறைகளை கேட்டறிந்தார்கள். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் ந.சரவணன், திட்ட இயக்குநர் ஊரக வளர்ச்சி முகமை ச.செல்வராணி, நேர்முக உதவியாளர் பாக்கியலட்சுமி, சமூக பாதுகாப்புதிட்டம்தனித்துணை ஆட்சியர் கீதாலட்சுமி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் பூமா, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் செந்தில் குமாரி. மாவட்ட வழங்கல் அலுவலர் பன்னீர் செல்வம்மற்றும் துறைச்சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

## நல்லூர் ஆட்டந்தாங்கல் பாலம் அருகில்

# மழை, காற்றினால் சாய்ந்த உயர் மின் கோபுர விளக்கை உடனடியாக சரி செய்த தவெக நிர்வாகி எம்.கார்த்திக்

செங்குன்றம், செப்டம்பர் 08:

திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் தொகுதி சோழவரம் கிழக்கு ஒன்றியம் நல்லூர் ஊராட்சி ஆட்டந்தாங்கல் பாலம் அருகில் உயர்மின் கோபுர விளக்கு ஒன்று உள்ளது. செங்குன்றம் சுற்றுவட்டாரத்தில் நேற்று முன்தினம் பெய்த திடீர் மழை, காற்றால் உயர் மின்கோபுர விளக்கு தூண் சரிந்து விழுந்தது.

இதன் அருகில் அமைந்துள்ள குடியிருப்புவாசிகள், கடை வியாபாரிகள் உடனடியாக திருவள்ளூர் தென்மேற்கு மாவட்டம், சோழவரம் கிழக்கு ஒன்றியத்திற்குட்பட்ட நல்லூர் ஊராட்சி தவெக நிர்வாகி எம்.கார்த்திக்கிடம் இந்த உயர்மின்கோபுரவிளக்கை சரி செய்து தருமாறு வேண்டுகோள் விடுத்தனர்.



அந்த வேண்டுகோளை உடனடியாக ஏற்று, தவெக நிர்வாகி எம்.கார்த்திக் ஜெசிபி இயந்திரங்களை கொண்டு உயர் மின்கோபுர விளக்கை தூக்கி நிறுத்தியதோடு, அடிப்பகுதியில் 5 அடிக்கு மேல் ஆழமெடுத்து, தூணை சுற்றி கற்கள், கான்கிரீட்டை கொண்டு பூசி பொதுமக்களின் பயன்பாட்டிற்காக உடனடியாக கொண்டு வந்தார்.

தவெக நிர்வாகி எம்.கார்த்திக் சேவையை அப்பகுதி பொதுமக்களும், சமூக ஆர்வலர்களும் வெகுவாகப் பாராட்டினர்.

## சோளிங்கர் அருகே பள்ளி மாணவர்கள், பெண்களுக்கு உரிய பாதுகாப்பு இல்லை எனக்கூறி நாய்க்கன்பாளையம் கிராமத்தில்

# டாஸ்மாக் மதுபான கடையை அகற்றக்கோரி பள்ளி மாணவர்கள் தமிழக முதல்வருக்கு கோரிக்கை விடுத்து ஆர்ப்பாட்டம்

ராணிப்பேட்டை,
செப்.8

சோளிங்கர் அருகே பள்ளி மாணவர்கள், பெண்களுக்கு உரிய பாதுகாப்பு இல்லை எனக்கூறி நாய்க்கன்பாளையம் கிராமத்தில்டாஸ்மாக்மதுபானகடையை அகற்றக்கோரி பள்ளி மாணவர்கள் தமிழக முதல்வருக்கு கோரிக்கை விடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ராணிப்பேட்டை மாவட்டம் சோளிங்கர் அடுத்த நாய்க்கன்பாளையம் பகுதியில் செயல்பட்டு வரும் டாஸ்மாக் மதுபான கடையை உடனடியாக அகற்ற வலியுறுத்தி, அரசு பள்ளி மாணவர்கள், விவசாயப் பணிகளில் ஈடுபடும் பெண்கள்மற்றும்கிராமபொதுமக்கள்மதுபான கடை முன்பாக திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்..

அப்போது, "டாஸ்மாக் மதுபான கடையை உடனடியாக அகற்ற வேண்டும்", "மாணவர்கள் மற்றும் பெண்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்க வேண்டுமெனதெரிவித்துபல்வேறுகோஷங்களை வெளிப்படுத்தி தமிழக முதல்வர் மற்றும் மாவட்ட நிர்வாகம் தலையிட்டு இப்பகுதி மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் எனவும் வலியுறுத்தினர்..

மேலும் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற அரசு பள்ளி மாணவர்கள் கூறுகையில், தாங்கள் வசிக்கும் பகுதிகளில் இருந்து பள்ளிக்கு செல்லவும், பள்ளி முடிந்து வீடு திரும்பவும் டாஸ்மாக் கடை அமைந்துள்ள பகுதியை கடந்து செல்ல வேண்டிய நிலை உள்ளதாக தெரிவித்தனர். குறிப்பாக மாலை நேரங்களில் மதுபோதையில் இருக்கும் சிலர் அதிக அது போதையில் ஆபாச வார்த்தைகளால் பேசுவதுடன், மாணவர்கள் மற்றும் பெண்களிடம் தகாத முறையில் நடந்து கொள்வதாகவும் குற்றம்சா ட்டினர் இதனால் பள்ளி மாணவிகள் மற்றும் பெண்கள் அச்சத்துடனேயே அவ்வழியாக சென்று வர வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகவும், பொதும க்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு டாஸ்மாக் மதுபான கடையை உடனடியாக வேறு இடத்திற்கு மாற்றவோ அல்லது உடனடியாக அகற்றவோ வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர்.. மேலும், மதுபான கடை காரணமாக அப்பகுதியில் சமூக பாதுகாப்பு பாதிக்கப்படுவதாக கூறிய கிராம பொதுமக்கள், தமிழக முதல்வர் மற்றும் ராணிப்பேட்டை மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுத்து பள்ளி பயிலும் மாணவர்கள் மற்றும் பெண்கள் அச்சமின்றி சென்று வருவதற்கான பாதுகாப்பான சூழலை ஏற்படுத்த வேண்டுமென கோரிக்கை விடுத்தனர் பெண்கள் மற்றும் மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய அரசு பள்ளி மாணவர்களே மதுபான கடையை அகற்ற வேண்டுமென நடத்திய ஆர்ப்பாட்டத்தின் காரணமாக அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது..







இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற திங்கள் கிழமை மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத் துறை சார்பில் 10 பயனாளிகளுக்கு ரூ.1.22 இலட்சம் மதிப்பீட்டிலான செயற்கை அவயங்கள் வழங்கினார் உடன் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் செந்தில் குமாரி உள்ளார்.

## தமிழ்நாடு சுற்றுலா விருதுகளுக்கு விண்ணப்பிக்கலாம்:

# திருவண்ணாமலை மாவட்ட சுற்றுலா தொழில் முனைவோருக்கு ஆட்சியர் வந்தனா கார்க் அழைப்பு

திருவண்ணாமலை,
செப்.8

தமிழ்நாடு சுற்றுலாத்துறையின் சார்பில் வழங்கப்படும் தமிழ்நாடு சுற்றுலா விருதுகளுக்கு திருவண்ணாமலைமாவட்டத்தைச் சேர்ந்த சுற்றுலா தொழில் முனைவோர் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடுமுதலமைச்சர் நல்வழிகாட்டுதலின்படி, மாநிலத்தில் சுற்றுலா த்துறையின் வளர்ச்சியை மேம்படுத்த பல்வேறு புதிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் ஒரு பகுதியாக, கடந்த 2022ம் ஆண்டு முதல்சுற்றுலாஏற்பாட்டாளர்கள், சுற்றுலா தொழில்முனைவோர், ஓட்டல் மற்றும் விருந்தோம்பல்நிறுவனங்களை ஊக்குவிக்கும் வகையில் தமிழ்நாடு சுற்றுலா விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த ஆண்டுக்கான விருதுகளுக்குசுற்றுலாத்துறை சார்பில் மொத்தம் 13 பிரிவுகளில் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

அதன்படி, சிறந்த உள்வரும் சுற்றுலா ஏற்பாட்டாளர், சிறந்த உள்நாட்டு சுற்றுலா ஏற்பாட்டாளர், சிறந்த பயணப் பங்குதாரர், சிறந்த தங்குமிடம், சிறந்த உணவகம், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின்சிறந்தசெயல்திறன் கொண்ட தங்குமிடம் மற்றும் படகு இல்லம், சுற்றுலா ஊக்குவிப்பில் சிறந்த மாவட்டம், தூய்மையான சுற்றுலாத்தலம், சிறந்த சிறப்பு சுற்றுலா ஏற்பாட்டாளர், சிறந்த மருத்துவ மற்றும் ஆரோக்கிய சுற்றுலாநிறுவனம், சிறந்த சாகச சுற்றுலா மற்றும் முகாம் தள ஏற்பாட்டாளர், சிறந்த சுற்றுலா வழிகாட்டி, சுற்றுலா மற்றும் விருந்தோம்பல்துறையில் சிறந்த கல்வி நிறுவனம் ஆகிய பிரிவுகளில் விருதுகள்வழங்கப்பட உள்ளன. இந்த விருதுகளுக்கான விண்ணப்பங்களை www.tntourismawards.com என்ற இணையதளத்தில் பதிவு செய்து சமர்ப்பிக்கலாம்.

விண்ணப்பிக்க கடைசி நாள்: 30.09.2026.

எனவே, திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள அனைத்து சுற்றுலா தொழில்முனைவோர் மற்றும் சுற்றுலாத்துறை சார்ந்த நிறுவனங்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்தி தமிழ்நாடு சுற்றுலா விருதுகளுக்கு விண்ணப்பிக்குமாறு மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் கேட்டுக் கொண்டுள்ளார்.





கொடைக்கானல் அருகே பாரதி அண்ணா நகர் பழங்குடி கிராம தோட்ட பகுதிக்குள் அமைந்திருக்கும் ஓராவி அருவி பகுதியில் சுற்றுலா சென்ற சென்னையைச் சேர்ந்த வாலிபர் திருநேசன் உயிரிழந்தார்.அவரது உடலை தீயணைப்புத் துறையினர் மீட்டு காவல் துறையினர், உடற்கூராய்விற்கு அரசு மருத்துவமனைக்கு அனுப்பியுள்ளனர்..





**அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி சட்டமன்ற அறிவிப்பு 2026.2027 அறிவிப்பு எண். 78வெள்ளித்திருப்பணிசட்டமன்ற அறிவிப்புகள் 2026 2027 அறிவிப்பு எண். 78ல் மலைக்கோயில் மகாமண்டபத்தின் நுழைவுவாயி லில் உள்ள சிவன் சன்னதிகளில் உபயத்திருப்பணியாக 89 கிலோகிராம் எடையில் வெள்ளித்தகடுகள் பொருத்தப்படும் என்று மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப் பட்டது.**

**அதன்படி மலைக்கோயில் மகாமண்டபத்தின் நுழைவுவாயிலின் உட்புறம் உள்ள இரண்டு சிவன் சன்னதிகளுக்குகரூரைச் சேர்ந்த ஜி.பத்ரிநயணன், பி.ஹேமலதா, பி.ஹேமந்த், எச். திவ்யா, பி.விக்னேஷ், வி.வைஷ்ணவி, ஜி.விஷ்ணுபிரசாத், வி.சங்கீதா, வி.அஷ்வின் குமார், ஏ.நிகிதா, வி.பிரஜித்குமார் ஆகியோர் உபயமாக வழங்கிய நகாஸ் வேலைப்பாடு செய்யப் பட்ட சுமார் எடை 88975 கிராம் புதிய வெள்ளித்தகடுகள் பொருத்தும் பணி 07.09.2026 இன்று திண்டுக்கல் துணை ஆணையர்/சரிபார்ப்பு அலுவலர் முன்னிலையில் பூஜைகள் செய்யப்பட்டு தொடங்கப்பட்டது.**

**இந்நிகழ்வில் திருக்கோயில் அறங்காவலர் குழுத்தலைவர், அறங்காவலர்கள், திருக்கோயில் இணை ஆணையர் / செயல் அலுவலர் (பொ) மலைக்கோயில் கண்காணிப்பாளர்கள் , திருக்கோயில் சர்வ சாதகர் மற்றும் திருக்கோயில் பணியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.**



திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் ஒன்றியத்துக்கு உட்பட்ட மேல்மலை கிராம பூம்பாறை பகுதியில் வருவாய்த்துறை அதிகாரிகளின் ஒத்துழைப்போடு தொடர்ந்து ஜெசிபி இயந்திரங்கள் கொண்டு மலைகளை குறைந்தெடுக்கும் நிகழ்வு நடந்து கொண்டிருக்கிறது

## இந்து மக்கள் கட்சி சார்பில்

# ராணிப்பேட்டை வருவாய் கோட்டாட்சியரிடம் வேலூர்கோட்ட தலைவர் எஸ்.கே.மோகன் மனு வழங்கினார்

இந்து மக்கள் கட்சி சார்பில் இன்று.7/9/26 ராணிப்பேட்டை வருவாய் கோட்டாட்சியரிடம் வேலூர்கோட்ட தலைவர் எஸ் கே மோகன் மனு வழங்கினார்

வாலாஜா நகர மையப் பகுதியில் இந்து மக்கள் கட்சி சார்பில் வருகின்ற 14ஆம் தேதி விநாயகர் பிரதிஷ்டை செய்து மூன்றாம் நாளான 16ஆம் தேதி காலை 10:30 மணி அளவில்.வாலாஜா ஐயப்பன் கோவில் அருகில் இருந்து அரசு மருத்துவமனை பின்புறத்தில் உள்ள வீசி மோட்டூர் ஏரியில் நிறைவு பூஜை செய்ய தூய்மைப்படுத்த வேண்டும் மக்கள் பாதுகாப்பாக இருக்க தடுப்புகள் அமைக்க வேண்டும் ஜேசிபி கிரைன். தீயணைப்பு துறை அதிகாரி. எனவே.விநாயகர் ஊர்வலம் கொண்டு செல்லும் பாதையில் இறைச்சி கடைகள் பிரியாணி கடைகள் போக்குவரத்து மாற்று பாதையில் அமைக்க வேண்டும் வேகத்தடைகளை அப்புறப்படுத்த வேண்டும் தூய்மை பணி செய்து தர வேண்டும் பல்வேறு கோரிக்கைகளை கொண்ட மனுவானது வருவாய் கோட்டாட்சியரிடம் மனு கொடுக்கப்பட்டது பெற்றுக்கொண்ட வருவாய் கோட்டாட்சியர் உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு அனைத்து பணிகளையும் துரிதப்படுத்தி சிறப்பான முறையில் செய்து தருவதாக உத்தரவாதம் தெரிவித்தார் இந்த நிகழ்வில் கலந்து கொண்ட கட்சி நிர்வாகிகள் மாவட்ட கௌரவ தலைவர் செல்வராஜ் மாவட்ட செயலாளர் பார்த்திபன் வாலாஜா ஒன்றிய பொதுச் செயலாளர் குமார் வாலாஜா ஒன்றிய செயலாளர் மணிவண்ணன் வாலாஜா ஒன்றிய கிழக்கு தலைவர் அன்பழகன் வாலாஜா மேற்கு ஒன்றிய தலைவர் பிரபாகரன் கலந்து கொண்டனர்





## திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில்

# மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம்




திருவள்ளூர், செப்டம்பர் 08:

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக மக்கள் குறைதீர்க்கும் நாள் பல்நோக்கு கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கவிதா பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டு அதற்கு உரிய தீர்வு காணசம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு உத்திரவிட்டார்.

மாவட்ட வருவாய் அலுவலர் கே.வி.ராஜ்குமார், உதவி ஆட்சியர் (பயிற்சி) பி.பவித்ரா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) வெங்கட்ராமன், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) வெங்கடேசன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் உஷாராணி, மாவட்ட வழங்கல் அலுவலர் முத்துலட்சுமி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) வேல்முருகன் மற்றும் பல் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

# மாநில அளவிலான காவல்துறை அதிகாரிகளுக்கான துப்பாக்கி சுடுதல் போட்டி - 2026




ஆவடி, செப்டம்பர் 08:

2026ஆம் ஆண்டிற்கான மாநில அளவிலான காவல்துறை உயர் அதிகாரிகளுக்கான துப்பாக்கி சுடுதல் போட்டி தமிழ்நாடு கமாண்டோ படை தலைமையகம், மருதம் வளாகத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குனர்/ படைத்தலைவர் டாக்டர் மகேஷ்குமார்அகர்வால், காவல்துறை உயர் அதிகாரிகள் கலந்து கொண்டு தங்களது துப்பாக்கி சுடும் திறனை வெளிப்படுத்தினர்.

இப்போட்டியில் சிறப்பாக செயல்பட்ட ஆவடி காவல் ஆணையாளர் டி.செந்தில்குமார் ஒட்டு மொத்த சாம்பியன்ஷிப் *(Overall Championship)* பட்டத்தை வென்றார். ஒட்டு மொத்த சாம்பியன்ஷிப் வெற்றிக்கான சாம்பியன் ஷிப் கோப்பையை தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குனர்/படைத்தலைவர் டாக்டர் மகேஷ் குமார் அகர்வால், ஆவடி காவல் ஆணையாளர் டி.செந்தில்குமாருக்கு வழங்கி பாராட்டினார்.

# கம்பத்தில் யாதவ சமுதாயத்தின் சார்பில் கிருஷ்ண ஜெயந்தி விழா

கம்பம்,செப்.08

கம்பம் யாதவர் மடாலயத்தில் உள்ள வேணுகோபால கிருஷ்ணன் கோவிலில் கிருஷ்ணஜெயந்தி திருவிழா கொண்டாடப்பட்டது. விழாவை முன்னிட்டு கம்பராயப்பெருமாள் கோவில் செயல்அலுவலர் நதியா தலைமையில் யாதவர்சமுதாய நிர்வாகிகள் முன்னிலையில் நடத்தப்பட்ட ஆலோசனை கூட்டத்தின்படி வெள்ளிக்கிழமை காலை வேணுகோபாலகிருஷ்ணன் கோவிலில் இருந்து பெண்கள் பால்குடம் எடுத்து கே.கே.பட்டி சாலை, செல்லாண்டியம்மன் கோவில் தெரு, காளியம்மன் கோவில், எல்.எப். ரோடு வழியாக மீண்டும் கோவிலை வந்தடைந்தது. பின்னர் வேணுகோபால கிருஷ்ணன் மூலவர் சுவாமிக்கு திருமஞ்சனம் நிகழ்ச்சி நடைபெற்றது. இதனை தொடர்ந்து அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. பின்னர் மதியம் 3 மணியளவில் யாதவ சமுதாய நாட்டாண்மை குணசீலனை யாதவர் சமுதாய தலைவர் சேகரன் தலைமையில் சமுதாய நிர்வாகிகள் மேளதாளம் முழங்க ஊர்வலமாக வேணுகோபால கிருஷ்ணன் கோவிலுக்கு அழைத்து வந்தனர் .பின்னர் யாதவ சமுதாய பெண்கள் பொங்கல் பானையுடன் கம்பராயப் பெருமாளுக்கு சென்று பொங்கல் வைத்தனர். பின்னர் கம்பராயப்பெருமாள் கோவிலில் சிறப்பு பூஜை நடைபெற்றது. இதனை தொடர்ந்து கம்பராயப்பெருமாள், ஸ்ரீதேவி, பூமாதேவி, ஆஞ்சனேயர், லட்சுமி நாராயணபெருமாள்உள்ளிட்ட உற்சவர்கள் மற்றும் கருடாழ்வார் வாகனங்களை கோவில் மேளதாளத்துடன் டிராக்டரில் ஊர்வலமாக வேணுகோபால கிருஷ்ணன் கோவிலுக்கு கொண்டு வரப்பட்டன. பின்னர் இரவு பட்டி மன்ற நிகழ்ச்சியும், 10 மற்றும் 12ம் வகுப்பு பொதுத்தேர்வில் சாதனை படைத்த மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.



மறுநாள் சனிக்கிழமை கம்பராயப்பெருமாள், ஸ்ரீதேவி, பூமாதேவி, ஆஞ்சனேயர், லட்சுமி நாராயண பெருமாள் உள்ளிட்ட உற்சவர்களுக்கு திருமஞ்சனம் பூஜை நடைபெற்றது. பின்னர் அன்னதானம் வழங்கப்பட்டது. இதனை தொடர்ந்து மாலை உறியடிப்பவர் சிவனேசனை மேளதாளம் முழங்க சமுதாய நிர்வாகிகள் அழைத்து வந்தனர். பின்னர் சமுதாய தலைவர்கள், அரசியல் பிரமுகர்கள், நிர்வாககமிட்டி, விழா கமிட்டி நிர்வாகிகளுக்கு மரியாதை செலுத்தப்பட்டது. பின்னர் அலங்கரிக்கப்பட்ட கருடாழ்வார் வாகனத்தில் கம்பராயப்பெருமாள், ஸ்ரீதேவி, பூமாதேவி, ஆஞ்சனேயர், லட்சுமி நாராயண பெருமாள் உள்ளிட்ட உற்சவர்களின் வீதி உலா நிகழ்ச்சி நடைபெற்றது .கம்பம் வேணுகோபால கிருஷ்ணன் கோவிலில் இருந்து கம்பம் நகரின் முக்கிய வீதிகளான போக்குவரத்து சிக்கனல், காந்தி சிலை, தியாகி வெங்காடச்சலம் தெரு, பார்க் ரோடு, வேலப்பர் கோவில் வழியாக உலாவந்தார். பின்னர் நள்ளிரவு 12 மணியளவில் வேலப்பர் கோயில் முன்பு வழுக்கு மரம் ஏறும் போட்டி நடைபெற்றது. இதற்காக 30 அடி உயரமுள்ள வழுக்கு மரம் வைக்கப்பட்டிருந்தது. இந்த போட்டியில் யாதவ சமுதாயத்தைச் சேர்ந்த இளைஞர்கள் மற்றும் சிறுவர்கள் ஆர்வமாக கலந்து கொண்டு வழுக்குமரம் ஏறினர். பின்னர் உறியடி நிகழ்ச்சி நடைபெற்றது. இதனை தொடர்ந்து கம்பராயப்பெருமாள் கோவிலில் வீதி உலா நிகழ்ச்சி நிறைவடைந்தது.

பின்னர் கம்பராயப்பெருமாள் கோவிலில் கருடாழ்வார் வாகனம் மற்றும் கம்பராயப்பெருமாள், ஸ்ரீதேவி, பூமாதேவி, ஆஞ்சனேயர், லட்சுமி நாராயண பெருமாள் சாமியை கோவில் நிர்வாகத்திடம் ஒப்படைத்தனர். பின்னர் சிறப்பு பூஜை நடைபெற்றது. இதனை தொடர்ந்து நாட்டாண்மை குணசீலன், யாதவ சமுதாய தலைவர் சேகரன், செயலாளர் குணசீலன், வழுக்கு மரம் ஏறி வெற்றி பெற்ற ஹர்சன், உறி அடித்த சிவனேசன், உறி இழுத்த பொன்னுச்சாமி பிள்ளைக்கு கோவில் நிர்வாகம் சார்பில் மரியாதை செலுத்தப்பட்டது. இதனை தொடர்ந்து யாதவ சமுதாய பொருளாளர்கள் சந்தனம், சத்யநாராயணன், செயற்குழு உறுப்பினர்கள் மாரியப்பன், குருசாமி, கண்ணன், சரவணன், இளையபெருமாள், கருப்பசாமி, கண்ணன், குமரேசன், ராகுல், விழா கமிட்டி நிர்வாகிகள் பால கிருஷ்ணன், அய்யா கண்ணு, கணேசன், செந்தில்குமார், முத்துராஜ், கார்த்திக், சிவக்குமார் ஆகியோர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில் பாதுகாப்பு ஏற்பாடுகளை கம்பம் தெற்கு போலீஸ் இன்ஸ்பெக்டர் லாவண்யா தலைமையில் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர் .




### தமிழகத்தில் மக்கள் பேராதரவுடன் முதலமைச்சர் ஜோசப் விஜய் தலைமையில்

## தவெக 100 நாள் சாதனை விளக்க கூட்டத்தில் தவெக நல்லாட்சியே இன்னும் 100 ஆண்டுகள் ஆட்சி செய்யும்

### சிறு குறு தொழில் துறை அமைச்சர் மதன் ராஜா, நலத்திட்ட உதவிகள் வழங்கி சூளுரை,

தூத்துக்குடி செப்8

தமிழக முதலமைச்சர் ஜோசப் விஜய் ஆணைக்கேற்ப தூத்துக்குடி புறநகர் மாவட்டம் தவெக சார்பில் புதியம்புத்தூர் கனி மஹாலில் தவெகவின் 100 நாள் சாதனை கூட்டம் தூத்துக்குடி புறநகர் மாவட்ட செயலாளர் சிறு குறு தொழில்துறை அமைச்சர் மதன் ராஜா தலைமையில் தவெக மாநில செய்தி தொடர்பாளர்கள் ஆனந்த்ஜித்மகியா, கேத்தரின் பாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் நாராயணன் சதீஷ் கிறிஸ்டோபர், மாநிலத்துணைப் பொதுச் செயலாளர்கள் சுபத்திரா, ராஜகோபாலன், தலைமை கழக நிர்வாகி வினோத் குமார், மற்றும் ஓட்டப்பிடாரம் வடக்கு ஒன்றிய செயலாளர் ஆறுமுக கிருஷ்ணன், கருங்குளம்வடக்கு ஒன்றிய செயலாளர் முத்துகிருஷ்ணன், ஓட்டப்பிடாரம் தெற்கு ஒன்றிய பொருளாளர் ஸ்ரீநிவாசன் செயலாளர் கனகராஜ், மேலமடம் கிளைச் செயலாளர் சக்தி கிருஷ்ணமூர்த்தி, மகளிர் அணி வனிதா, மற்றும் புறநகர் மாவட்ட ஒன்றிய நிர்வாகிகள் மற்றும் கிளைக் கழகச் செயலாளர்கள் முன்னிலையில் நடைபெற்ற தவெக 100 நாள் சாதனை விளக்க பொதுக்கூட்டத்தில் தமிழ்நாடு சிறு குறு தொழில் துறை அமைச்சர் மதன் ராஜா பேசுகையில் தவெக நல்லாட்சியில் பெண்களை பாதுகாத்திட சிங்கப்பெண் அதிரடிகா வல்படை, மற்றும் லஞ்சத்தை ஒழித்திடும் வகையில் அரசு அலுவலகங்களில் லஞ்சம் வாங்க கூடாது என்ற அதிரடி உத்தரவு, மேலும் அரசு அலுவலகங்களில் மக்களுக்கு தேவையான அனைத்து சான்றுகளும் உடனுக்குடன் வழங்க வேண்டும் என்று மக்களுக்கான நல்லாட்சியை தவெக சார்பில் தந்து வரும் தமிழக முதலமைச்சர் ஜோசப் விஜய் தலைமையில் இன்னும் நூறு ஆண்டுகள் தமிழகத்தை தமிழக வெற்றி கழகம் தான் மக்களின் பேராதரவடன் நல்லாட்சி செய்யும் என்று தவெக 100.நாள் சாதனை விளக்க கூட்டத்தில் அமைச்சர் மதன் ராஜா, நலத்திட்ட உதவிகள் வழங்கி னார்.

### உணவு நிறுவனங்களில் 3 மாதம் அதிரடி ஆய்வு:

# விதிமீறினால் அபராதம், வழக்கு, உரிமம் ரத்து ஆட்சியர் வந்தனா கார்க் எச்சரிக்கை

திருவண்ணாமலை, செப்.8

திருவண்ணாமலை மாவட்டத்தில் செயல்பட்டு வரும் அனைத்து உணவு சேவை நிறுவனங்களிலும் சுகாதாரம் மற்றும் உணவின் தரத்தை உறுதி செய்யும் வகையில் 3 மாத கால சிறப்பு ஆய்வு (Special Drive) நடைபெற உள்ளதாக மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறை ஆணையர் உத்தரவின்படியும், மாவட்ட ஆட்சியரின் வழிகாட்டுதலின்படியும், செப்டம்பர் 1 முதல் நவம்பர் 30, 2026 வரை இந்த சிறப்பு ஆய்வு நடைபெறுகிறது.

இதன்படி, மாவட்டத்தில் செயல்படும் உணவகங்கள், ஓட்டல்கள், உணவுக்கூடங்கள், விடுதிகள், சிற்றுண்டிச் சாலைகள், கேன்டீன்கள், சுபகாரிய சமையல் ஏற்பாட்டாளர்கள், தெருவோர உணவு வியாபாரிகள், தேநீர்கடைகள், சிறிய ரக திண்பண்டக் கடைகள் உள்ளிட்ட அனைத்து உணவு வணிக நிறுவனங்களிலும் தீவிர ஆய்வு மேற்கொள்ளப்பட உள்ளது.

உணவு வணிகர்கள் அனைவரும் செல்லுபடியாகும் FSSAI உரிமம் அல்லது பதிவு சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். உரிமம் அல்லது பதிவு இல்லாமல் செயல்படும் நிறுவனங்கள் மீது உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் சட்டம், 2006ன் பிரிவு 63ன் கீழ் கடும் நடவடிக்கை மற்றும் அபராதம் விதிக்க ப்படும்.

மேலும், உணவு பாதுகாப்பு அலுவலர்களின் சரிபார்ப்புப் பட்டியலை பயன்படுத்தி, தங்களது நிறுவனங்களில் சுய தணிக்கை செய்து குறைபாடுகளை முன்கூட்டியே சரிசெய்து,

ஆய்வின்போது சுய தணிக்கை அறிக்கையை வைத்திருக்க வேண்டும்.

சமையலறை, உணவு சேமிப்பு பகுதிகள், குளிர் சாதனப் பெட்டிகள், மேஜைகள் மற்றும் உணவு தயாரிப்பு உபகரணங்கள் தூய்மையாக பராமரிக்கப்பட வேண்டும். பூச்சி மற்றும் எலி கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்பட்டு, அதற்கான ஆவணங்களும் பராமரிக்கப்பட வேண்டும்.

உணவு கையாளுபவர்கள் அனைவரும் மருத்துவத் தகுதிச் சான்றிதழ் பெற்றிருப்பதுடன், FOSTAC உணவு பாதுகாப்புப் பயிற்சியில் பங்கேற்று சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

பணியாளர்கள் தலைக்கவசம், கையுறை, முகக்கவசம் மற்றும் சுத்தமான ஏப்ரன் அணிந்து பணியாற்ற வேண்டும்.

பயன்படுத்தப்பட்ட சமையல் எண்ணெயை மீண்டும் பயன்படுத்தக் கூடாது.

அவற்றை FSSAI அங்கீகரித்த RUCO முகவர்களிடம் ஒப்படைத்து, அதற்கான பதிவுகளை பராமரிக்க வேண்டும். செயற்கை நிறமிகள், தமிழக அரசால் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் செய்தித்தாள் உள்ளிட்ட மையிட்ட காகிதங்களில் உணவுப் பொருட்களை பொட்டலமிடுவதும் தவிர்க்கப்பட வேண்டும்.

மேலும், சமையலறைகளில் தரமான மற்றும் துருப்பிடிக்காத கத்திகள் மற்றும் வெட்டுக் கருவிகளை மட்டுமே பயன்படுத்த வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சிறப்பு ஆய்வின்போது உணவு பாதுகாப்பு விதிகளை மீறும் நிறுவன ங்களுக்கு உடனடி மேம்பாட்டு அறிவிப்பு வழங்கப்பட்டு, அபராதம் விதிக்கப்படு வதுடன், சட்டப்பூர்வ வழக்கும் தொடரப்படும்.

தேவையான சூழ்நிலையில் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் உணவு உரிமம் ரத்து செய்யப்படும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் சட்டம், 2006ன் கீழ் மாவட்ட நியமன அலுவலர் மற்றும் உணவு பாதுகாப்பு அலுவலர்களுக்கு, மாநில உரிமம் பெற்ற நிறுவனங்கள் மட்டுமின்றி மத்திய FSSAI உரிமம் பெற்ற உணவு நிறுவனங்களிலும் ஆய்வு மேற்கொள்ள முழு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார்.

எனவே, மாவட்டத்தில் செயல்படும் அனைத்து உணவு வணிக நிறுவனங்களும் உணவு பாதுகாப்பு விதிகளை முழுமையாக பின்பற்றி, பொதுமக்களுக்கு பாதுகாப்பான மற்றும் தரமான உணவை வழங்க ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

# "முல்லைப்பெரியாறு வதந்திகளின் மாய வலை" உடைந்த பொய்களும் உறையாத உண்மைகளும்

முல்லைப்பெரியாறு அணை விவகாரத்தில் ஊடக வியூஸ்களுக்காக பரப்பப்படும் போலி அனிமேஷன் அச்சுறுத்தல்களும், உணர்ச்சிகரமான அரசியல் பிரசாரங்களும் இரு மாநில மக்களிடையே தேவையற்ற அச்சத்தையும் கலக்கத்தையும் ஏற்படுத்தி வருகின்றன. பொய்கள் மிக வேகமாக பரவும் இன்றைய சூழலில், ஆணித்தனமான சான்றுகளையும் வரலாற்று உண்மைகளையும் கடந்துதான் இத்தகைய மாய வலையை நாம் உடைக்க முடியும். அணையின் கட்டுமானத்தில் பயன்படுத்தப்பட்ட கலவை இயந்திரங்களை (Concrete Mixers) ஏதோ அணை உடைந்ததற்கு ஆதாரமாக சித்தரிப்பதும், இல்லாத ஒன்றுக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் (RTI) மனுப்போட்டு பரபரப்பை ஏற்படுத்த முயல்வதும், இக்கால கட்டத்தில் எத்தகைய அடிப்படை ஆதாரமற்ற கதையாடல்கள் மக்கள் மத்தியில் உலா வருகின்றன என்பதற்கு தெளிவான சான்றுகளாகும். அதே நேரத்தில், வரலாற்று உண்மைகளை நாம் நேர்மையோடு அணுக வேண்டும். அன்றைய மெட்ராஸ் மாகாண அரசின் உத்தரவின் பேரில், பொறியாளர் ஏ.டி. மெக்கன்சி (A.T. Mackenzie) என்பவரால் 1899இல் பதிவு செய்யப்பட்டு வெளியிடப்பட்ட "History of the Periyar Project" என்ற அதிகாரப்பூர்வ அரசு வரலாற்று நூலிலேயே, முதன்மை பொறியாளர் ஜான் பென்னி குவிக் சந்தித்த பெரும் வெள்ள அபாயங்கள், நோய்த்தொற்றுகள் மற்றும் தொழிலாளர்களின் ஈடு இணையற்ற தியாகங்கள் மிக விரிவாக பதிவு செய்யப்பட்டுள்ளன. தேனி மாவட்ட மக்களால் தெய்வமாக போற்றப்படும் பென்னி குவிக், தனது முழுமையான தொழில்சார் உழைப்பையும் அர்ப்பணிப்பையும் வழங்கி இந்த அணையை உருவாக்கினார் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. எனினும், "அவர் தனது சொந்த சொத்துக்களை விற்றுதான் அணையை கட்டினார்" என்று பரவலாக பேசப்படும் கூற்றுக்கு எந்தவொரு அதிகாரப்பூர்வ பிரிட்டிஷ் ஆவணங்களோ அல்லது சட்டப்பூர்வ சான்றுகளோ இல்லை என்பதும் வரலாற்று பூர்வமான உண்மையாகும். உணர்ச்சிகரமான கதைகளை விடவும், மெக்கன்சியின் நூலில் பதிவு செய்யப்பட்டுள்ள பென்னி குவிக்கின் உண்மையான பொறியியல் நுட்பமும் அர்ப்பணிப்புமே என்றும் நிலைத்து நிற்கக்கூடியவை. அரசியல் களத்தில், "கேரளாவிற்கு பாதுகாப்பு, தமிழ்நாட்டிற்கு தண்ணீர்" என்ற முழக்கத்தோடு இருதரப்பு பேச்சுவார்த்தைகளுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டாலும், அது அம்மாநில தலைவர்களின் அரசியல் சார்ந்த கருத்தே தவிர, சட்டப்பூர்வமான உண்மை அல்ல. 1886ஆம் ஆண்டின் 999 ஆண்டுகால குத்தகை ஒப்பந்தத்தின்படி, அணை அமைந்திருக்கும் நிலப்பரப்பு கேரள எல்லைக்குட்பட்டது என்றாலும், அணையின் முழுமையான பராமரிப்பு, இயக்கம் மற்றும் நிர்வாக உரிமைகள் அனைத்தும் தமிழ்நாட்டிற்கே சாசனப்பூர்வமாக சொந்தமானவை. ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி ஏ.எஸ். ஆனந்த் தலைமையிலான உயர்மட்ட குழு மற்றும் மத்திய நீர் ஆணையத்தின் (CWC) நிபுணர்கள் இணைந்து நடத்திய ஆழமான தொழில்நுட்ப ஆய்வுகளின் அடிப்படையில், இந்திய உச்ச நீதிமன்றம் 2014இல் வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பை வழங்கியது. அணை நில அதிர்வு ரீதியாகவும், கட்டமைப்பு ரீதியாகவும் நூறு சதவீதம் முழு பாதுகாப்போடு உள்ளது என்பதும், 1886 ஆம் ஆண்டு ஒப்பந்தம் சட்டப்படி முழுமையாக செல்லுபடியாகும் என்பதும் உச்ச நீதிமன்றத்தால் ஆணித்தனமாக உறுதி செய்யப்பட்ட உண்மைகள். அணையின் நிர்வாகத்தில் எழும் நடைமுறை சிக்கல்களை தவிர்க்க இரு மாநில அதிகாரிகளின் ஒருங்கிணைப்பு மிக அவசியமானது என சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். தமிழ்நாடு அதிகாரிகள் அணைப்பகுதியில் ஆய்வுகள் மேற்கொள்ளும் போது, அது கேரள எல்லை என்பதால் இடுக்கி மாவட்ட நிர்வாகத்திற்கு முறைப்படி முன்அறிவிப்பு செய்ய வேண்டும். அதேபோல், கேரள நிர்வாகமோ அல்லது அதிகாரிகளோ அணை பகுதியில் ஏதேனும் ஆய்வுகளையோ நடவடிக்கைகளையோ மேற்கொள்ள முற்படும்போது, அது தமிழ்நாட்டின் கட்டுப்பாட்டில் உள்ள அணை என்பதால் தேனி மாவட்ட ஆட்சியர் மற்றும் தமிழ்நாடு நீர்வளத்துறை அதிகாரிகளுக்கு அதிகாரப்பூர்வமாக தகவல் தெரிவிக்க வேண்டும். இரு மாநில அதிகாரிகளும் தங்களுக்குள் முறையான தகவல் பரிமாற்றத்தையும் பரஸ்பர மரியாதையையும் பேணினாலே, தேவையில்லாத முரண்பாடுகளும் வதந்திகளும் பரவுவது ஆரம்பத்திலேயே தடுக்கப்பட்டுவிடும். அறிவியல் பூர்வமான சான்றுகளையும், உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பையும் பக்கவாட்டில் ஒதுக்கிவிட்டு, வெறும் வதந்திகளையும் போலி கதைகளையும் நம்புவது இரு மாநில நல்லுறவுக்கு அச்சுறுத்தலாகும். போலி பிரசாரங்களை சட்டப்பூர்வமாகவும் அறிவியல் பூர்வமாகவும் அரசுகளும், நீதிமன்றங்களும், அதிகாரிகளும் பொறுப்புடன் கையாளும் வேளையில், தமிழ் மற்றும் மலையாள பொதுமக்கள் உணர்ச்சி வசப்படாமல் உண்மைகளை மட்டும் உற்று நோக்க வேண்டும். தலைமுறை தலைமுறையாக தொடரும் இரு மாநில சகோதரத்துவத்தையும், அன்றாட அமைதியையும் போலி வதந்திகளால் சீர்குலைக்காமல் காப்பதே பொறுப்புள்ள குடிமக்களாகிய நம் அனைவரின் தலையாய கடமையாகும்.

# பெண்களை கொச்சையாகப் பேசும் தவெகவினரையும் விஜய் கண்டிக்க வேண்டும்: பிரேமலதா

“பெண்களைப் பற்றி மிக மிக கொச்சையாக பதிவு போடும் தவெகவினரை முதல்வர் விஜய் கண்டிக்க வேண்டும்” என சட்டப்பேரவையில் தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இது குறித்து அவர் பேசுகையில், “பெண்கள் குறித்து யாரும் தவறாக பேசக் கூடாது; பேசினால் நடவடிக்கை எடுப்பேன்” என முதல்வர் விஜய் கூறிய கருத்தை வரவேற்கிறேன்; அவர் சொன்ன கருத்து எல்லோருக்கும் பொதுவான கருத்தாக இருக்க வேண்டும்.

பெண் தலைவர்கள், பெண்களைப் பற்றி சமூக வலைதளங்களில் மிக மிகக் கொச்சையாகவும் தவறாகவும் பதிவு செய்பவர்களில் தவெகவினரும் இருக்கிறார்கள்; அவர்களையும் முதல்வர் நிச்சயம் கண்டிக்க வேண்டும்“ என்று பேசினார்.

இதற்குப் பதிலளித்து பேசிய அமைச்சர் நிர்மல் குமார், “ஒரு சிலர் எங்கள் கட்சி பெயரில் போலி ஐடிகள்உருவாக்கி பேசுகிறார்கள். திமுகவினர்தொடர்ந்து இது போல செய்து கொண்டு இருக்கிறார்கள்.

கேப்டன் விஜயகாந்திற்கு என்ன என்ன சங்கடம் ஏற்படுத்தினார்களோ, அதைத்தான் எங்களுக்கும் செய்கிறார்கள். தவெகவில் யார் தவறாகப் பேசினாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது” என்று பதிலளித்தார்.

பின்னர் பிரேமலதா விஜயகாந்த் செய்தியாளர்களிடத்தில் பேசுகையில், “இன்றைக்கு சட்ட ப்பேரவை முடிவதற்குள் காவல் துறைக்கு முதல்வர் நல்ல அறிவிப்புகளை வெளியிட வேண்டும்” இவ்வாறு அவர் பேசினார்.

Printed by S.BALASUBRAMANIAN and Published by M.VEERAMANI on behalf of M.VEERAMANI, Printed at "SANKARJI COMPUTER GRAPHICS PRINTER", No. 8/31, Seegampatty, K.Pudupatty (Post), Kulithalai (Taluk) Karur (District) - 639 105, Published At No. 1080. Kattupatti Road. Viralimalai (Taluk), Pudukkottai (District)-621316 EDITOR: GRAJA